பக்கங்கள் 17

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 தை 27 சனிக்கிழமை 10.02.2024 அதிர்வு 194

## மரக்கிளை முறிந்து வீழ்ந்ததில் காயமடைந்த மற்றுமொரு மாணவனும் இன்று சாவு!



கம்பளையில் உள்ள சர்வதேச பாடசாலை யொன்றில் மரக்கிளை முறிந்து விழுந்ததில் 04▶

## குருநகர் கடலில் மிதந்த நிலையில் இனந்தெரியாத ஆணின் சடலம் மீட்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், குருநகர் பகுதியில் இனந்தெரியாத ஆண் ஒருவரின் சடலம் இன்று காலை மீட்கப்பட்டுள்ளது.

குருநகர் கடற்கரையோரப் பகுதியில் மிதந்த நிலையில் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

அப்பகுதி மக்கள் வழங்கிய தகவலுக்கமைய சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சடலத்தை யாழ்ப்பாணம் 04▶



## புதுக்குடியிருப்பில் பெண்ணின் சடலம்

### கிணற்றிலிருந்து மீட்பு

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு – ஒன்பதாம் வட்டாரப் பகுதியில் கிணற்றிலிருந்து இன்று காலை பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

அண்மையில் குழந்தை ஒன்றைப் பிரசவித்த நிலையில் கடந்த 11 நாள்களாக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் வீடு திரும்பிய பெண்ணே சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். 04▶

# ரணில் - ஜெய்சங்கர் ஆஸியில் சந்திப்பு!

## இலங்கையின் அரசியல் நிலைமை தொடர்பில் பேச்சு



இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

ஆஸ்திரேலியாவின் பேர்த் நகரில் நடைபெறும் 7ஆவது இந்து சமுத்திர மாநாட்டின்போது இந்தக் கலந்துரையாடல் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் இரு தரப்பு திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பில் கவனம் செலுத்தும் வகையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

இதன்போது இலங்கையின் சமகால அரசியல் விடயங்கள் தொடர்பிலும் பேசப்பட்டன என்றும் அறியமுடிகின்றது.

# ஓரிரு நாள்களில் நாடு திரும்புகின்றார் பஸில் அதன்பின்பே வேட்பாளரைத் தீர்மானிப்போம்

## மொட்டுக் கட்சி பகிரங்க அறிவிப்பு

“ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நிறுவுநர் பஸில் ராஜபக்ஷ இன்னும் ஓரிரு நாள்களில் நாடு திரும்புவார். அதன்பின்னர் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் முடிவெடுக்கப்படும்.”

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

“கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போதும் இறுதித் தருவாயிலேயே ஜனாதிபதி வேட்பாளரைப் பெயரிட்டோம். வேட்பாளர் ஒருவரைக் களமிறக்குவதற்கான பலம் எமது கட்சியிடம் இன்னும் உள்ளது. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பலர் போட்டியிடவுள்ளனர். எனவே, வெற்றி வேட்பாளர் ஒருவரை நிச்சயம் களமிறக்க வேண்டும். உரிய வகையில் வியூகம் அமைத்து, கட்சியாகக் கூடிய முடிவெடுக்கப்படும்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் ஐந்தாறு மாதங்கள் உள்ளன. எனினும், அதுவரைக் காத்திருக்கமாட்டோம். பஸில் ராஜபக்ஷ 04▶



# இமயமலைப் பிரகடனத்தின் தேசிய உரையாடலுக்கான பயிலரங்குகள் ஆரம்பம்



இலங்கையில் தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வைக் காணும் வகையில் தயாரிக்கப்பட்ட இமயமலைப் பிரகடனத்தின் அடிப்படையில் தேசிய உரையாடலுக்காக மாவட்ட ரீதியில் முன்னெடுக்கப்படவுள்ள பயிற்சிப்பட்டறைகளுக்கான பயிலரங்குகள் ஆரம்பமாகியுள்ளன.

இமயமலைப் பிரகடனத்தின் சிறப்பம்சங்கள் குறித்த உரையாடல்களை ஊக்குவிக்கும் வகையில், 150 சர்வமத குருமார்கள் மற்றும் சிவில் சமூக உறுப்பினர்களை ஒருங்கிணைப்பாளர்களாக பயிற்றுவிப்பதற்கான ஐந்து பயிலரங்குகள் திட்டமிடப்பட்டுள்ளன.

முதலாவத பயிலரங்கு குருநாகலில் ஆரம்பமாகியுள்ளது. இதனையடுத்து கண்டி, மட்டக்களப்பு, மாத்தறை மற்றும் வவுனியாவில் பயிலரங்குகள் இடம்பெறவுள்ளன. இதன்போது அருகில் உள்ள மாவட்டங்களின் பிரதிநிதிகளும் இதில் பங்குபற்கவுள்ளனர்.

இந்தப் பயிலரங்குகளின் பங்கேற்பாளர் எதிர்வரும் மாதங்களில் நாட்டில் உள்ள 25 மாவட்டங்களிலும் உரையாடல்களை எளிதாக்குவதற்கான முக்கிய வளவாளர்களாக இருப்பார்கள்.

அந்தவகையில் குருநாகலில் நடைபெற்ற பயிலரங்கில் புத்தளம் மற்றும் அனுராதபுர மாவட்டங்களைச் சேர்ந்த பௌத்த, இந்து, முஸ்லிம், மற்றும் கிறிஸ்தவ மதத்தலைவர்கள் சிவில் சமூகப் பிரதிநிதிகள் உட்பட 30 இற்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்றிருந்தனர்.

சிறந்த இலங்கைக்கான சங்கத்திலிருந்து, மாதம்பகம அசாஜி திஸ்ஸ தேரர், பேராசிரியர் பல்லேகந்தே ரத்னசார தேரர், கித்தலாகம ஹேமசார நாயக்க தேரர் மற்றும் சியம்பலகஸ்வெள விமலசார தேரர் ஆகியோருடன் உலகத் தமிழர் பேரவையின் சார்பாக அமெரிக்காவைச் சேர்ந்த எலியாஸ் ஜெயராஜா கலந்து கொண்டார்.

போரினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான சங்கத்தின் சார்பில் விசாகா தர்மதாச மற்றும் அதன் அங்கத்தவர்களும் இதில் பங்கேற்றிருந்தனர்.

இந்நிலையில், இந்தப் பயிலரங்கு நாகர்கோட் உரையாடலின் தொடர்ச்சியாக நடைபெற்ற கலந்துரையாடல் போல் இருந்தது எனவும், பெரும்பாலான பங்கேற்பாளர்களிடமிருந்து இமயமலைப் பிரகடனம் பற்றி மிகவும் சாதகமான கருத்துக்களைக் கேட்டதாகவும் இதில் கலந்துகொண்ட எலியாஸ் ஜெயராஜா தெரிவித்தார்.

இதேவேளை, இமயமலைப் பிரகடனம் தொடர்பான தேசிய உரையாடலில் மாவட்டம் தோறும் 5 சர்வமதத் தலைவர்களும் ஒரு சிவில் சமூக உறுப்பினருமாக மாவட்டத்துக்கு தலா 6 பேர் பிரதிநிதித்துவப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.










# யானை - மனித மோதலைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

**(பாறுக் ஷிஹான்)**

யானை - மனித மோதலைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி எழுத்தாணை மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று நீதிக்கான மய்யம் அமைப்பின் தலைவர் சட்டத்தரணி எச்.இஸ்மாயில் தெரிவித்தார்.

யானை - மனித மோதலை தடுக்க நீதிக்கான மய்யம் மேற்கொண்ட சட்ட நடவடிக்கை தொடர்பாக ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் மாநாடு நீதிக்கான மய்யத்தின் சாய்ந்தமருது அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்த ஊடக மாநாட்டில் நீதிக்கான மய்யம் அமைப்பின் தலைவர் சட்டத்தரணி எச்.இஸ்மாயிலுடன் நீதிக்கான மய்யத்தின் பிரதித் தலைவர் யூ.கே.எம். றிம்சான், செயலாளர் கலாநிதி றியாத் ஏ.மஜீத் ஆகியோர் இணைந்திருந்தனர்.

இதன்போது மேலும் தெரிவித்ததாவது,

அம்பாறை மாவட்ட கரையோர பிரதேசமானது யானைகள் வாழ்கின்ற பிராந்தியம் அல்ல. குறிப்பிட்ட காலங்களில் அம்பாறை மாவட்டத்தினுள் வருகின்ற யானைகள் அம்பாறை மாவட்ட யானைகள் இல்லை. வெளிமாவட்டங்களில் இருந்து கொண்டுவரப்பட்டு யானைகள் இங்கு விடப்படுகின்றன. இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் ஆராயப்பட வேண்டியுள்ளது.

தற்போது இந்த விடயம் பாரிய பிரச்சினைகளை உருவாக்கியுள்ளது. அம்பாறை மாவட்டத்தில் நீண்ட காலமாக நிலவி வரும் யானை - மனித மோதலுக்கான தீர்வு பெற்றுக்கொள்ளப்படவில்லை.

இதனால் யானை - மனித மோதலைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி எழுத்தாணை மனுத் தாக்கலை எமது அமைப்பு மேற்கொண்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எழுத்தாணை மனுவொன்று கடந்த திங்கட்கிழமை (05) தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதன்படி கடந்த 5 வருடங்களில் யானைகளின் தாக்குதலால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையில் கிழக்கு மாகாணம் இரண்டாவது இடத்தில் காணப்படுகின்றது.

அம்பாறை மாவட்டத்தில் உயிரிழப்பு அதிகமாக காணப்படுகிறது. இதற்குத் தீர்வு வழங்குமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எழுத்தாணை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சுற்றாடல் அமைச்சு, வனஜீவராசிகள் திணைக்களம், அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துக்கு எதிராக எமது அமைப்பு குறித்த எழுத்தாணை மனுவை தாக்கல் செய்துள்ளது.- என்றார்.

# இயற்கை முறையில் பயிரிடப்பட்ட வேளாண்மை அறுவடை விழா!





**(வி.ரி. சகாதேவராஜா)**

அம்பாறைமாவட்ட பெண்கள் வலையமைப்பின் ஏற்பாட்டில் விவசாய உள்ளீடுகள் வழங்கப்பட்டு விளைந்த நெல் அறுவடை விழா நாவிதன்வெளியில் நடைபெற்றது.

நாவிதன்வெளி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட 15 ஆம் கிராம வேப்பையடி கிராம குழு உறுப்பினர்கள் 22 பேருக்கு அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் இயற்கை முறையில் விவசாயத்தை மேற்கொள்வதற்காக விதை நெல் வழங்கப்பட்டு விதைப்பு செய்யப்பட்டது.

அந்த வேளாண்மை அறுவடை விழா பாரம்பரிய முறைப்படி ஆரம்பிக்கப்பட்டு அறுவடை மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிகழ்வுக்கு அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் இணைப்பாளர் திருமதி கலைவாணி தயாபரன் தலைமை தாங்கினார்.

அமைப்பின் நாவிதன்வெளி கள உத்தியோகத்தர் ராஜினி மற்றும் குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

# நாங்கள் இந்த நாட்டு குடிமக்கள் இல்லையா?

## சபையில் மனோ எம்.பி. கேள்வி



"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அளித்த வாக்குறுதியின்படி, 20 இலட்சம் கிராமிய விவசாயிகளுக்கு காணி உரிமை வழங்கும் நடவடிக்கையைக் இம்மாதம் 5ஆம் திகதி தம்புள்ளையில் ஆரம்பித்துள்ளீர்கள். நல்ல விடயம். பாராட்டுகின்றேன். ஆனால், இதே மாதிரி பெருந்தோட்ட மக்களுக்கு 10 பேர்ச் காணி தருகின்றேன் என நீங்கள் தந்த வாக்குறுதிக்கு என்னாச்சு? அதற்கு 400 கோடி ரூபா ஒதுக்குகின்றோம் என்றீர்கள். அதற்கும் என்னாச்சு? நாம் இந்நாட்டு குடிமக்கள் இல்லையா?"

– இவ்வாறு நாடாளுமன்றத்தில் நேற்று கேள்விக்கணைகளைத் தொடுத்துள்ளார் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் உரையாற்றுகையில்,

"ஜனாதிபதியைக் கேட்டால் தோட்டக் கம்பனிகள் காணி தரத் தயங்குவதாகக் கூறுகின்றார். இதென்ன, இந்நாட்டு அரசு, நீங்களா? அல்லது குத்தகையில் தோட்டங்களை நடத்தி வரும் கம்பனிகளா?

அதேபோல், கொழும்பில் தொடர்மாடிகளில் வாழும் 50 ஆயிர குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பத்திரம் தருவதாகச் சொன்னீர்கள். அதற்கும் என்னாச்சு?

நகர அபிவிருத்தி சபையைக் கேட்டால் 15 ஆயிரம் மனைகள் என்கிறார்கள். தேசிய வீடமைப்பு அதிகார சபையைக் கேட்டால் 5 ஆயிரம் மனைகள் என்கிறார்கள்.

உண்மையில் எத்தனை மனைகள்? எத்தனை குடும்பங்கள்? 20 ஆயிரமா? 30ஆயிரமா? 40ஆயிரமா? உண்மையைச் சொல்லுங்கள்? எப்போது வழங்குவீர்கள் எனச் சொல்லுங்கள்? – என்றார்.

# விவசாயிகளின் மரக்கறி உற்பத்தியை நியாயமாகச் சந்தைப்படுத்தத் திட்டம்!

(தலவாக்கலை நிருபர்)

தலவாக்கலை பிரதேச செயலகம், மரக்கறிகளை பயிரிடும் விவசாயிகளின் மரக்கறி உற்பத்திகளை தலவாக்கலை பிரதேச செயலகத்தில் நியாயமான விலையில் சந்தைப் படுத்துவதற்கான விசேட வேலைத்திட்டம் ஒன்றைத் தயாரிக்கவுள்ளது.

தலவாக்கலை பிரதேச செயலர் பிரிவில் மலையக மரக்கறிச் செய்கையில் பெரும்பாலான மக்கள் ஈடுபட்டுள்ளனர்.

தமது மரக்கறி அறுவடைகளை நியாயமான விலைக்கு விற்பனை செய்ய முடியாமல் கடும் சிரமங்களையும் பல்வேறு அசௌகரியங்களையும் எதிர்நோக்கி வந்தனர்.

இந்த நிலையில் தலவாக்கலை பிரதேச செயலாளர் எஸ். எஸ். பிரேமசிங்கவின் தலைமையீட்டின் பேரில், தலவாக்கலை உதவிப் பிராந்தியச் செயலாளர் மற்றும் நுவரெலியா மாவட்டச் செயலக சிறுதொழில் அபிவிருத்திப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் ஆகியோருக்கும் மரக்கறி விவசாயிகளுக்கும் இடையே விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்த நிலையில் விவசாயிகளின் மரக்கறி அறுவடையை நியாயமான விலையில் பெற்றுக் கொடுக்க இந்த நாட்டின் முன்னணி நிறுவனம் ஒன்று நடவடிக்கை எடுத்துள்ளது. தனியார் வர்த்தக வங்கியொன்றும் இதற்கு ஆதரவளித்து வருகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 'செம்பாத்தாள்' கூத்துருவ நாடகம்

திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கும் 'செம்பாத்தாள்' கூத்துருவ நாடகம் நாளை ஞாயிற்றுக்கிழமை (11) மாலை 6.45 மணிக்கு இல. 238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது.

ஒல்லாந்தர் காலத்தில் 1679 இல் வன்னிப் பிரதேசத்தில் தென்னமரவடி பிராந்தியத்துக்குத் தலைமை வகித்த மரிய செம்பாத்தாவின் வரலாற்று அடிப்படைகளில் இருந்து கற்பனையுடன் உருவாக்கப்பட்ட படைப்பாக 'செம்பாத்தாள்' கூத்துருவ நாடகம் தயாரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### ஓரிரு நாள்களில்...

ஓரிரு நாள்களில் நாடு திரும்புவார். அவர் வந்த பின்னர் முடிவெடுக்கப்படும்.

தற்போதைய சூழ்நிலையில் எமது கட்சியே முன்னிலையில் இருக்கின்றது. கூட்டணியாகவே ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவோம்." – என்றார்.

### குருநகர்...

நீதிமன்ற நீதிவான், சட்டவைத்திய அதிகாரி, தடயவியல் பொலிஸார் உள்ளிட்டவர்கள் பார்வையிட்டு விசாரணையில் ஈடுபட்டனர். அதன்பின்னர் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

### புதுக்குடியிருப்பில்...

அதே பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய பெண்ணே உயிரிழந்துள்ளார்.

மரணத்துக்கான காரணம் தெரியவராத நிலையில், புதுக்குடியிருப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

### காயமடைந்த...

காயமடைந்த மற்றுமொரு மாணவனும் இன்று உயிரிழந்துள்ளார்.

கம்பளை, பிபில பகுதியைச் சேர்ந்த மொஹமட் அயான் என்ற 4 வயது மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கம்பளை நகரில் உள்ள சர்வதேச பாடசாலையொன்றின் வளாகத்தில் பாரிய மரமொன்றின் கிளை கடந்த 5 ஆம் திகதி முறிந்து வீழ்ந்ததில் 5 வயது மாணவன் ஒருவர் பலியானார்.

காயம் அடைந்த மேலும் இரண்டு மாணவர்களில் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக இருந்தது. அவர் கண்டி வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே இன்று உயிரிழந்துள்ளார். காயமடைந்த மற்றைய மாணவன் குணமடைந்து வீடு திரும்பியுள்ளார்.

# ஜீவநதி ஆரம்ப ஆசிரியர் கலாமணி காலமானார்!

வடமராட்சி பிரதேச கல்வி புலமையாளர்களில் ஒருவரான யாழ். பல்கலைக்கழக கல்வித்துறை முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி தம்பிஜயா கலாமணி தனது 72 ஆவது வயதில் இன்று (10) அதிகாலை காலமானார்.

அல்வாய் தெற்கைச் சேர்ந்த அன்னார் ஆரம்ப கல்வியை வதிரி தேவரையாளி இந்து கல்லூரியிலும் இடைநிலை கல்வியை நெல்லியடி மத்திய கல்லூரியிலும் கற்று யாழ். பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டு கலைப் பட்டதாரியானார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் பகுதி நேர விரிவுரையாளராக இணைந்து கலைப்பீட விரிவுரையாளரானார்.

உயர் கற்கைகளை மேற்கொண்டு கலாநிதி பட்டத்தை பெற்றுக் கொண்ட அவர் யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளராக நீண்ட காலம் பணியாற்றியிருந்தார்.

கலை இலக்கிய துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்ட இவர் காத்தவராயன் உள்ளிட்ட பல இதிகாச புராண நாடகங்களை இயற்றியும் நடித்தும் மேடையேற்றியுள்ளார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையாரான இவரின் ஒரு மகனான பரணிதரன் கடந்த சில ஆண்டுகளாக ஜீவநதி எனும் இலக்கிய மாத சஞ்சிகையை வெளியிட்டு வருகிறார்.



கலாமணி அவர்களது தந்தையர் தம்பியஜயா புகழ் பூத்த அண்ணாவியாராவார்.

கடந்த சில வருடங்களாக உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டிருந்த அவர் இன்று (10) அதிகாலை காலமானார்.



# திருமலை மாணவருக்குக் கற்றல் உதவிகள்

(ஹஸ்பர்)

கோல் கீப்பர் ராஜா நினைவாக அன்பே சிவம் அறக்கட்டளையின் கீழ் லண்டன் வாழ் இமானுவல் ஜெரோம், நாகராஜ் மகேந்திர ரவி ஆகியோரது நிதிப் பங்களிப்பில் திருகோணமலை வாழ் மாணவர்களுக்கான கற்றல் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த உதவித்திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்தில் கும்புறுபிட்டி மெதடிஸ் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் மிகவும் வறுமைக் கோட்டில் வாழும் மாண வர்களுக்கு கற்றல் உபகரணம் வழங் கப்பட்டது.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ஜனாதிபதி விடும் கதை

'கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுண்டம் போவேன் என்றானாம்.''

- இப்படி ஒரு பழமொழி நம் மத்தியில் தாராளமாகப் பேசப்படுவதுண்டு.

மாகாண சபைகள் தொடர்பில் இந்திய ஊடகம் ஒன்றுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அளித்துள்ள பேட்டி ஒன்று தொடர்பில் வெளியாகி உள்ள செய்தியை வாசித்த போது இந்தப் பழமொழி நினைவுக்கு வருவது தவிர்க்க முடியாததாக இருக்கின்றது.

''அடுத்த வருடம் மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவோம். நாடாளுமன்ற அமர்வுகளை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய வேளை நான் தெரிவித்தமை போல நாங்கள் ஒவ்வொரு மாகாணசபைக்கும் அதன் சொந்தப் பொருளாதாரத்தை வழங்க விரும்புகின்றோம்.

''அதன் காரணமாக இந்தியா போன்று ஒவ்வொரு மாகாணமும் ஏனைய மாகாணத்தின் பொருளாதாரத்துடன் போட்டியிடும். இதனால் நன்மையேற்படும். பொருளாதாரம் போட்டி தன்மை மிகுந்ததாக காணப்படும்.

''மேலும் இந்த மாகாணங்கள் தங்களின் பொருளாதார, சமூக அபிவிருத்தியைத் தேசியக் கொள்கைக் கட்டமைப்பிற்குள் கையாள வேண்டும்.

''இந்த அடிப்படையில் ஒருங்கியல் அதிகாரப்பட்டியலில் உள்ள அதிகாரங்களை அதில் அனேகமானவற்றை அல்லது தேவையானவற்றை மாகாணங்களுக்கு வழங்கத் தயாராகவுள்ளோம்.''

- வழமை போல இப்படி எல்லாம் கயிறு விட்டிருக்கின்றார் - பீற்றியிருக்கின்றார் - ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

தாம் ஜனாதிபதியாகப் பதவியேற்ற காலத்தில் இருந்து - கடந்த ஒன்றரை வருடங்களாக - அடிக்கடி இப்படிப் பல அறிவிப்புகளை வெளியிடுகின்றார் - பலூன்களைப் பறக்க விடுகின்றார் - ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்று இப்பத்தியில் பல தடவைகள் சுட்டிக் காட்டி வந்திருக்கிறோம். அத்தகைய வெற்று வேட்டு அறிவிப்புகளின் வரிசையில் இந்த அறிவிப்பும் ஒன்று. அவ்வளவுதான். அதற்கு மேல் இது விடயத்தில் ஏதும் நடக்கப் போவதில்லை என்பது தெரிந்ததுதான்.

'பச்சைத் தண்ணீரில் பலகாரம் சுடுவது போல' இப்படி வெறும் வாய்ப்பு பந்தல் பேச்சில் உல்லாசப் பயணம் செல்வது மாதிரிக் காட்டுவதில் அவர் அசகாய சூரர். அதைத்தான் செய்கின்றார்.

அரசமைப்பின் 13 ஆம் திருத்தம் மூலம் கொண்டுவரப்பட்ட அதிகாரப் பகிர்வு முறைமையே இன்று முழு உறைநிலைக்குச் சென்று விட்டது.

அரசமைப்புத் திருத்தம் மூலம் பகிரப்பட்டவை எனக் காட்டப்பட்ட அதிகாரங்களில் பல - குறிப்பாக பொலிஸ், காணி அதிகாரங்கள் போன்றவை - நடைமுறைக்கே வரவில்லை.

நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டவற்றிலும் பல விடயங்கள் புதிய சட்டங்கள் மற்றும் சட்டத் திருத்தங்கள் மூலம் மீண்டும் பிடுங்கி எடுக்கப்பட்டு விட்டன.

மிஞ்சிய எச்ச சொச்சத்தைக் கூட மாகாண சபைகள் தெரிவு செய்யப்பட்ட தமது மக்கள் பிரதிநிதிகள் மூலம் கையாள முடியாமல் பூட்டுப் போடப்பட்டு விட்டது. இப்போது மாகாணங்கள் நேரடியாக நிறைவேற்றதிகார ஜனாதிபதியினால், அவரது நேரடிப் பிரதிநிதிகளான மாகாண ஆளுநர்கள் மூலம் நிர்வகிக்கப்படுகின்றன.

ஆக, மாகாண சபை மூலமான அதிகாரப் பகிர்வு முழுமையாக உறைநிலைக்குப் போய் ஐந்து வருடங்களுக்கு மேலாகிவிட்டது. அத்தகைய நிலைமையை ஏற்படுத்தும் விதத்தில் அதுவரையில் இருந்த மாகாண சபைத் தேர்தல் சட்டங்களை இல்லாமலாக்கி, மாகாண சபை தேர்தல்களுக்கு ஆப்படித்தது இதே ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராகக் கொண்டு இயங்கிய நல்லாட்சி அரசுதான்.

அவ்வளவையும் செய்து விட்டு வந்துதான் உருத்திராட்ச பூனை போல - சாத்தான் வேதம் ஓதுவது போல - மத்திய அரசுக்கும் மாகாண சபைகளுக்கும் பொதுவான அதிகாரம் பற்றிய பட்டியலில் இருக்கும் பல அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு கையளிப்பது குறித்துத் தத்துவம் பிளக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அடுத்த வருடம் மாகாண சபை தேர்தல் என்று இப்போது கதை விடுகின்றார் அவர். அடுத்த வருடம் அதை அவர் நடத்துவதற்கு இந்த வருடம் நடைபெறும் ஜனாதிபதி தேர்தலில் அவர் வென்றாக வேண்டும். அதுவே பெரும்பாலும் சாத்தியமில்லை என்பது உறுதியாக வரும் நிலையில், அடுத்த வருடம் மாகாண சபை தேர்தலைத் தாமே நடத்துவது குறித்துப் பிரபலாபிக்கின்றார் அவர்.

அண்மைக்காலம் வரை '13 மைனஸ்' குறித்துத் தெற்கில் கருத்துக்களை வெளியிட்டு வந்த அவர், இப்போது இந்திய ஊடகத்திற்கு மத்திய அரசுக்கும் மாகாண அரசுக்கும் பொதுவான அதிகாரங்களின் பட்டியலில் உள்ள விடயங்களை மாகாண சபைகளுக்கு விட்டுக் கொடுப்பது குறித்துப் புதுக்கதை அவிழ்க்கின்றார்.

இதுவும் கூட 'பயணக் களைப்புக்கு பேச்சுப் பல்லக்கு' என்பது போல ரணில் தனது அரசியல் பயணத்துக்கு வசதியாக அவ்வப்போது பறக்கவிடும் பலூன்களின் வரிசையில் ஒன்றுதான்.



# நீலையூர் சுதா எழுதிய கவிதை நூல் வெளியீடு!

(அபு அலா)

பெரிய நீலாவணை பைந்தமிழ்ச் சுடர் சிவபாதசுந்தரம் சுதாகரன் (நீலையூர் சுதர்) எழுதிய “கொத்துவேலி” கவிதை நூல் வெளியீட்டு விழா கடந்த புதன்கிழமை (07) திருமலை நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், எழுத்தாளரும் மாகாணப் பண்பாட்டலுவல்கள் பணிப்பாளருமாகிய ச.நவநீதன் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவுக்கு விருந்தினர்களாக திருகோணமலை மாவட்ட அரச அதிபர், கிழக்கு மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள், திணைக்களங்களின் மாகாணப் பணிப்பாளர்கள், கிழக்கு பல்கலைக்கழக திருமலை வளாக முதல்வர் உள்ளிட்ட பல உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

எண்ணம்போல் வாழ்க்கை இலக்கியமன்றத்தின் ஒருங்கமைப்பில் இடம்பெற்ற இந்நூல் வெளியீட்டு விழாவின் வரவேற்புரையை எண்ணம்போல் வாழ்க்கை இலக்கிய மன்றத் தலைவர் எழுத்தாளர் கனக. தீபகாந்தனும், “கொத்துவேலி” நூலாசிரியர் பற்றிய அறிமுகவுரை, நூல்பற்றிய சிறப்பு நயவுரையை சமூகசேவைத் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் எழுத்தாளர் இரா.கி.இளங்குமுதன் மற்றும் ஓய்வுநிலை அதிபர் கவிஞர் இரா.இரத்தினசிங்கம் ஆகியோரும் நிகழ்த்தினர்.





# மாணவர்களுக்குக் கற்றல் உபகரணம்

(கல்லடி செய்தியாளர்)

சாக்ரமெண்டோ தமிழ் மன்ற கலிபோர்னியா நிதிப் பங்களிப்புடனும், அன்பு நெறியின் ஒருங்கிணைப்புடனும் சிவானந்த பழைய மாணவர் சங்கத்தால் ஏறாவூர் பிரதேச மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இடைத்தங்கல் முகாமில் இருந்து வீடு திரும்பிய மாணவர்களுக்கே ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகத்தில் வைத்து அப்பியாச கொப்பிகள் வழங்கப்பட்டுள்ளன.

பிரதேச செயலாளர் எஸ்.தனபாலசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஆ.சுதாகரன், சிவானந்த பழைய மாணவர் சங்கத்தின் முன்னாள் தலைவர் எந்திரி எம். மங்களேஸ்வரன், சிவானந்த பழைய மாணவர் சங்க உப தலைவர் எஸ். ரவீந்திரன் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.







# புதிய கல்விச் சீர்திருத்த நடவடிக்கைக்கு வடக்கில் இரு பாடசாலைகள் தெரிவு

(வசந்தன்)

புதிய கல்வி சீர்திருத்தத்தின் கீழ் முன்னோடி திட்டத்திற்காக வடக்கு மாகாணத்தில் இருந்து வவுனியா கனகராயன்குளம் மகாவித்தியாலயம் மற்றும் முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம் என்பன தெரிவு செய்யப்பட்டுள்ளன.

புதிய கல்விச் சீர்திருத்தத்தின் கீழ் தரம் 8-11 வரையான மாணவர்களுக்கு எண்ணிம குடியுரிமைத் திறன்கள் பாடம் ஐ.நாவின் இணை நிறுவனமான யுனிசெவ் நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இதற்காக, இலங்கையின் ஒவ்வொரு மாகாணங்களிலும் இருந்து இரு பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு முன்னோடிச் செயற்றிட்டமாக பாட அறிமுகத்தை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டு தெரிவு செய்யப்பட்ட 18 ஆசிரியர்களுக்கு பயிற்சி தேசிய கல்வி நிறுவகத்தில் வழங்கப்பட்டது.

இதன் பிரதான வளவாளர்களாக சிங்கப்பூரைச் சேர்ந்த டிஜிட்டல் ஊடக தளத்தில் நிபுணத்துவம் மிக்க சுவப்னா



பவர் மற்றும் கோபல் அஹர்வால் ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சி வழங்கினர்.

இதனை நிறைவு செய்த ஆசிரியர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இந்தச் செயற்றிட்டமானது இந்த வருடம் முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.



# பெரும்போக வேளாண்மை அறுவடையில் பாரிய வீழ்ச்சி!

தற்போது பெரும்போக நெற்செய்கை அறுவடையானது இயந்திரம் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்த முறை அறுவடையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று கிண்ணியா பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பத்து ஏக்கர் வன்னியனார் மடு விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

சீரற்ற காலநிலை காரணமாகப் பல குளங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டன. இதனால் ஒரு வகையான நோய் தாக்கம் ஏற்பட்டமையால் நெற் செய்கை அழிவடைந்துள்ளது. விளைச்சலிலும் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

ஒரு ஏக்கருக்கு எட்டு தொடக்கம் பத்து மூடைகளுக்கும் குறைவாகவே கிடைக்கப் பெறுகின்றது. நெல்லுக்கான உத்தரவாத விலை இன்மையால் தற்போது ஒரு மூடை 5500 வரை செல்கிறது. வெட்டுக் கூலி 17 ஆயிரம் ரூபாவாகக் கொடுக்கவேண்டியுள்ளது என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.




# நிந்தவூர் பிரதேச செயலகத்தில் சுதந்திர இரவு ஒன்று கூடல்!

(எம். எப். நவாஸ்)

நிந்தவூர் பிரதேச செயலக நலன்புரி அமைப்பின் ஏற்பாட்டில் சுதந்திர இரவு எனும் தலைப்பில் ஒன்றுகூடல் நிகழ்வு பிரதேச செயலக வளாகத்தில் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஜனாப் ஏ.எம். அப்துல் லத்தீப் தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வானது பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ. ஜாரியாவின் சுதந்திர இரவினில் வாழ்வோம் வாழ்த்துவோம் எனும் தலைப்பிலான வரவேற்பு கவிதையுடன் ஆரம்பமானது.

ஓய்வு பெற்றுச் சென்ற, இடம் மாற்றலாகிச் சென்ற மற்றும் உத்தியோகத்தர்களின் பிள்ளைகளின் சாதனைகளையும் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது.



இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக அபேவர்த்தன மற்றும் அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் வி.ஜெகதீசன், ஏனைய பிரதேச செயலாளர்கள், உதவிப் பிரதேச செயலாளர்கள், கணக்காளர்கள் நிந்தவூர் பிரதேச பதவிநிலை உத்தியோகத்தர்கள், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட அம்பாறை மாவட்ட அரச அதிபர் கிரீடம் அணிவித்து நினைவு சின்னங்கள் வழங்கிப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

# வவுனியா துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்!

வவுனியா பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் தம்பு மங்களேஸ்வரனின் பதவிக் காலம் எதிர்வரும் ஜூலை 13 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ள நிலையில் புதிய துணைவேந்தர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 10.04.2023 ஆம் திகதிய 03- 2023 ஆம் இலக்க சுற்றுநிருபத்துக்குமைவாக பல்கலைக்கழகப் பேரவையின் பதவி வழிச் செயலரான பதிவாளரால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிப்பதற்கான தகைமைகள் மற்றும் மேலதிக விவரங்களை https://vau.ac.lk/calling-applications-for-the-post-of-vice-chancellor/ என்ற இணையத் தளத்தில் பார்வையிட முடியும்.

ஆர்வமுடையவர்கள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் மாதம் 21 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு முன்னதாகப் பல்கலைக்கழகப் பதிவாளருக்குக் கிடைக்கக் கூடியவாறு தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பம் மற்றும் ஆவணங்களின் மென்பிரதி பதிவாளரது registrar@vau.ac.lk என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.



# ‘காப்பெற்’ வீதியில் உலரும் நெல் நச்சுத் தன்மைக்கு மாறுகிறதா?

■ ந.லோகதயாளன்

‘காப்பெற்’ வீதிகளில் உலரவிடப்படும் நெல் நஞ்சுத் தன்மை கொண்டவையாக மாற்றமடைகிறது என்று கிளிநொச்சி மாவட்ட விவசாய அறுவடைக்கு பின்னரான தொழில் நுட்ப நிறுவனம் தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்ட விவசாய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் 2024.02.08 அன்று மாவட்டச் செய லகத்தில் மாவட்டச் செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ் வரன் தலைமையில் இடம்பெற்றபோதே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் – மன்னார் வீதி, பரந்தன் – முல்லைத்தீவு வீதி, புளியங்குளம் – நெடுங்கேணி வீதியென வடக்கின் பெரும்பாலான பிரதான வீதிகளில் நெல் அறுவடை காலங்களில் நெல் உலரவிடுவது என்பது பலரின் விமர் சனத்துக்கும் சிலரின் பரிதாபத்துக்குமான விடயமாக மாறிவிட்டது.

இது தொடர்பிலே கிளிநொச்சி மாவட்ட கலந்துரை யாடலில், வீதிகளில் உலரவிடும் நெல் இரசாயனத் தன்மை கொண்டவையாக மாற்றமடைகிறது என்று கிளிநொச்சி மாவட்ட விவசாய அறுவடைக்கு பிந்திய தொழில் நுட்ப நிறுவனம் குறிப்பிட்டமை தொடர்பிலும் அங்கே காணப்படும் நெருக்கடிகள் தொடர்பாகவும் இரணைமடு விவசாயிகள் சம்மேளனச் செயலாளர் மு.சிவமோகனைத் தொடர்புகொண்டு கேட்டபோது,

விவசாயிகள் இன்று விவசாயம் புரிவதென்பது ஓர் தாய் குழந்தை பிரசவிப்பதற்கு நிகராகிவிட்டது. அந்தளவு கஷ்ர துன்பங்களைத் தாண்டியே விவசாயத்தில் ஈடுபடவேண்டிய நிலையில் விவசாயிகள் உள்ளனர்.

போதிய விளைச்சல் இல்லாத நிலையில் அறுவடை செய்த நெல்லைக் கூடப் பாதுகாப்பதற்கு முடியாது திண் டாடுகின்றனர்.அறுவடை செய்யப்படும் நெல் அதிக ஈரப் பதத்துடன் காணப்படுவதால் அவற்றை அப்படியே சேமிக்க முடியாத நிலைமை காணப்படுகிறது. இந்த நிலை யில் உடனடியாக உலரவிட வேண்டிய தேவை உள்ளது.

அதுமட்டுமன்றிக் கிளிநொச்சி மாவட்டத்தில் கால போகத்தில் 65 ஆயிரம் ஏக்கர் நிலம் விதைக்கப்படுகின்றது. இவை வெறும் 20 நாள் இடைவெளியில் அறுவடை செய்ய வேண்டும். அந்தக் காலப் பகுதியில் அனைவரும் நெல்லை உலர விட்டே ஆக வேண்டிய கட்டாயத்தின் உள்ளனர். விவசாய அமைப்புக்களிடம் உள்ள காய்தளத் தில் இட வசதி இன்மையாலுமே விவசாயிகள் விதிக்கு வருகின்றனர். இருந்தபோதும் அவை போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பதை நாம் மறுக்கவில்லை. அதனால் போதிய தளவசதி ஏற்படுத்தும் வரையிலுமே இந்த நெருக்கடி காணப்படும்.– என்றார்.

இதேநேரம், முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி, வீதியில் நெல் உலர விடுவதால் ஏற்படும் ஆபத்துத் தொடர்பில் மாவட்ட அரச அதிபருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

இவ்வாறு பொது அமைப்புக்கள், பயணிகள், விவசாயிகள் கூறும் கருத்து தொடர்பில் கிளநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனைத் தொடர்புகொண்டு கேட்டபோது,

இந்த விடயம் தொடர்பில் மாவட்ட கூட்டத்தில் விவாதித்த வேளையில், அறுவடைக்கு பிந்திய தொழில் நுட்ப நிறுவனத்தினர், மாவட்ட விவசாய ஆராச்சி நிறுவனத்தினர் உட்பட பலரும் வீதியில் நெல் உலர விடுவதால் ஏற்படும் அபாயத்தை எடுத்துக் கூறியதோடு நெல் இரசாயனத் தாக்கத்துக்கு உட்படுகின்றது என்பதையும் தெளிவாகக் கூறினர்.

தளத்தில் 3 தினங்கள் உலரவிடவேண்டிய நெல் ‘காப்பெற்’ தார்படுக்கை வீதிகளில் ஒரு நாளில் உலர்வதே அதிக தாக்கம்தான். தார்படுக்கை வீதிகள் ஆபத்து என்பதன் காரணமாகவே மாவட்டத்தில் அமைக்கப்பட்ட நெல் உலரவிடும் தளங்கள் அனைத்தும் சீமெந்தால் மட்டும் அமைக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது 100 இற்கும் மேற்பட்ட விவசாய அமைப்புக்கள் உள்ளன. அதில் 80 இற்கும் மேற்பட்ட அமைப்புகளிடம் உலரவிடும் தளங்கள் கைவசம் உள்ளன. அவற்றில் ஒரே தடவையில் 70 மூடை நெல் உலரவிட முடியும். இவை தாண்டி பச்சை நெல்லாகவே பல தனியார் கொள்வனவு செய்கின்றனர். நெல் உலரவிடும் 3 இயந்திரங்களும் மாவட்டத்தில் உள்ளன. இதனால விவசாயிகள் தனியான இடத்தை பயன்படுத்த வேண்டுமே அன்றி வீதிகளை பயன்படுத்தக்கூடாது.

இவ்வாறு வீதிகளில் நெல் உலரவிட்டதன் விளை வாகவே 2023 ஆம் ஆண்டு 3 உயிர்கள் பரிதாபகரமாக இழக்கப்பட்டன.

இதேநேரம் தளம் இல்லை என விவசாயிகள் கூற முடியாது. போதாது என்பது உண்மைதான். அவற்றையும் அடுத்து வரும் வருடங்களில் நிறைவு செய்ய முயற் சிக்கலாம். இதேநேரம் அமைத்துக் கொடுத்த தளங்களில் பல பயன்படுத்தப்படாமல் உள்ளதையும் நாம் கண்ணுற்றுள்ளோம்.– என்றார்.

இதேநேரம் ஏ– 32 வீதி மற்றும் பரந்தன் – முல்லைத்தீவு வீதியிலேயே அதிக நெல் உலர விடப்படுகிறது. கால போகத்தில் அதிக நெல் என்பதால் தளம் போதாது எனக் கூறும் விவசாயிகள் சிறுபோகத்தில் 30 ஆயிரம் ஏக்கர் விதைக்கும்போதும் வீதிகளிலேயே உலரவிடுகின்றனர்.

இது விவசாயிகள் வெறுமனே தமது சுயநலத்தை மட்டுதே கருதுவதாகவே பார்க்கின்றேன் என விசுவமடு தொட்டியடியில் பஸ் வைத்திருக்கும் சிறிரங்கன் என்பவர் தெரிவிக்கின்றார்.

எது எவ்வாறாயினும் ‘காப்பெற்’ விதியில் உலர விடப் படும் நெல் மக்களுக்குப் பெரும் பக்க விஜளைவுகளை ஏற்படுத்தும் என்பதில் இருவேறுபட்ட கருத்துகளுக்கு இடமில்லை. எனவே இந்த விடயத்தில், உரிய தரப்புகள் வெறும் வாய் வார்த்தைகளுடனும் கலந்துரையாடல் களுடனும் நின்றுவிடாது உரிய நடவடிக்கைகளை விரைந்து எடுக்க வேண்டும்.



# மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களை வலுவூட்டும் செயற்றிட்டம் மட்டக்களப்பில்

(பழுவூரான்)

எஸ்கோ நிறுவனத்தால் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களை வலுவூட்டும் செயற்றிட்டம் தொடர்பான கலந்துரையாடல் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் மாவட்ட செயலகத்தில் புதன்கிழமை (07) இடம்பெற்றது.

எஸ்கோ நிறுவனத்தால் வாழைச்சேனை பிரதேச செயலர் பிரிவில் உள்ள மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களை வலுவூட்டும் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான முன்னாயத்தக் கலந்துரையாடல் கோறளைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி ஜே.திருச்செல்வம் பங்குபற்றுதலுடன் இடம்பெற்றது.

இதன் போது எஸ்கோ நிறுவனத்தால் முன்னெடுக்கப்படவுள்ள செயற்றிட்டங்கள் தொடர்பாக தெளிவுபடுத்தப்பட்டது.



எஸ்கோ நிறுவனமானது கடந்த காலங்களில் மாவட்டத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்குத் தேவையான வசதிகளை மேம்படுத்தல், பாதுகாப்பான புலம்பெயர்தலை உறுதிப்படுத்தல், பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள முன்பள்ளி சிறார்களுக்கான கல்வி வழங்கல், பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தல் போன்ற செயற்றிட்டங்கங்களை மேற்கொண்டு வருகின்றது.

இந்த நிகழ்வில் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்களான ஆர். ஜதிஸ்குமார், ரி.நிர்மலன், மாவட்ட கிராமிய அபிவிருத்தி உத்தியோகத்தர் வி.கோகுலராஜன், எஸ்கோ நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர்களான எஸ்.உதயேந்திரன், பி.ஸ்ரீதரன், கிராமிய அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.அகிலேஸ்வரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கல்லரிப்பு பழங்குடிக் கிராமத்தில் வள்ளுவம் பொங்கல் விழா!

(வி.ரி. சகாதேவராஜா)

வாகரை பிரதேசத்தில் உள்ள வெருகல் கல்லரிப்பு பழங்குடிக் கிராமத்தில், வள்ளுவம் அமைப்பின் பொங்கல் விழா புதன்கிழமை கிராமிய சூழலில் இடம்பெற்றது.

அடிப்படை வசதிகளற்ற கல்லரிப்புக் கிராம மக்களுக்கு வள்ளுவம் அமைப்பு பொங்கலுக்கென புதிய உடுப்புகள், பொங்கல் பானை முதல் சகல பொருள்களையும் வழங்கி இந்த பொங்கல் விழாவை நடத்தினர்.

அங்கு மலையக மக்களின் 200 வருட வாழ்வியல் சரித்தை பிரதிபலிக்கும் சிறப்பு நிகழ்ச்சி அம்சங்களும் அங்கே இடம்பெற்றன.

கொழுந்து பறித்தல் தொடக்கம் மலையக கலை கலாசார பாரம்பரியங்கள்ளை பறைசாற்றும் வகையில் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பாடசாலை, வைத்தியசாலை, வீதி என்று எந்த அடிப்படை வசதியும் அற்ற கல்லரிப்பு கிராமத்தில் 40 பழங்குடி குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன .

வள்ளுவம் அமைப்பினர் இந்த பொங்கல் விழா வழக்கம் போல் செய்தனர். சமூக செயற்பாட்டாளர் ஆசிரியை மலர்ச்செல்வி இதற்கான ஒழுங்கமைப்பை மேற்கொண்டிருந்தார்.





வள்ளுவம் அமைப்பு அந்தக் கிராமத்தைத் தத்தெடுத்துச் சகல தேவைகளையும் பூர்த்தி செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# மக்கள் நலன்பேணும் அரசியல்வாதிகளை ஆதரிப்பதில் எந்தத் தவறுகளும் இல்லை!

## முன்னாள் அமைச்சர் சுபைர் தெரிவிப்பு

(எஸ்.அஷ்ரப்கான்)

சமூகப்பற்றுள்ள மற்றும் மக்கள் நலன்பேணுகின்ற அரசியல்வாதிகளை ஆதரிப்பதில் எந்தத் தவறுமில்லை என்று கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் எம்.எஸ்.சுபைர் தெரிவித்தார்.

ஏறாவூர் ஹிதாயத் நகரில் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கி வைத்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நாட்டில் வாழும் முஸ்லிம் சமூகம் கடந்த காலங்களில் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கிய போது முஸ்லீம் சமூகத்தின் வாக்குகளைப் பெற்று அரசியல் அதிகாரங்களை கொண்டிருந்த சிலர் பணத்துக்கும் பதவிகளுக்கும் சோரம்போய் பேரின வாதிகளை திருப்திப்படுத்தினர்.

தேர்தல் வருகின்றபோது மக்களை நாடி வரும் குறிப்பிட்ட அரசியல்வாதிகள், ஏழை மக்களை மூளைச் சலவை செய்து அன்பளிப்புக்கள் எனும் போர்வையில் கப்பங்களைக் கொடுத்து அந்த மக்களின் வாக்குகளை கபளிகரம் செய்கின்றனர்.

ஆனால், தேர்தல் முடிந்ததும் எந்தவிதமான அபிவிருத்திகளையும் செய்யாமல் மக்கள் நலனில் அக்கரையில்லாமல் குடும்பத்தோடு கொழும்பில் உல்லாசமாக வாழ்கின்றனர்.

ஏழை மக்களின் வாக்குகளை சூறையாடி கடந்த காலங்களில் அரசியல் அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் இறுதியில் கட்சிக்கும் சமூகத்துக்கும் துரோகமிழைத்துவிட்டு முஸ்லிம் சமூகத்துக்கு எதிராக செயற்பட்டனர். கடைசியில் அவர்களின் நிலைமைகளை அவதானித்திருப்பீர்கள்.

ஏறாவூர் பிரதேசத்தில் வாழும் மக்கள் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு தங்களது பொருளாதாரங்களையும் உயிர் உடமைகளையும் இழந்தனர். தொடர்ச்சியாக விவசாயம் செய்து வந்த காணிகளையும் இழந்துள்ளனர்.

இந்தப் பிரதேசத்தில் தான் அதிகமான விதவைப் பெண்களும் வாழ்கின்றனர். இவர்கள் இழந்தவைகளை பெற்றுக்கொடுப்பதற்கும் ஏழைகளுடைய வாழ்வாதாரம் தொடர்பில் சிந்திப்பதற்கு அந்த அரசியல்வாதிகளால் முடியவில்லை.

நாட்டில் ஏற்பட்ட கொரோனா அனர்த்தம், அதன் பின்னரான அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி, வெள்ள அனர்த்தம் காரணமாகவும் இந்தப் பிரதேசத்தில் வாழும் நடுத்தர மற்றும் ஏழை மக்களின் வாழ்வாதாரம் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது. பதவிகளுக்குள்ளும் பணங்களுக்கும் மூழ்கி உல்லாசமாக வாழ்ந்து கொண்டிருப்பவர்களால் ஏழை மக்களின் வலிகளை உணரமுடியாது.

மக்களின் நலன் சார்ந்த விடயங்களுக்காக உழைக்கும் அரசியல்வாதிகளை இனம்கண்டு அவர்களை ஆதரிப்பதில் எந்த தவறும் இல்லை.

பல சவால்களுக்கும் எதிர்ப்புகளுக்கும் மத்தியில் கிடைத்த அரசியல் அதிகாரத்தைக்கொண்டு இந்த மண்ணிலே பெரும் பணிகளை செய்தவன்தான் நான். குறிப்பாக ஒவ்வொருவருடைய தேவைகளையும் பிரச்சினைகளையும்அறிந்துசேவையாற்றியவன். அரசியல் அதிகாரம் இல்லாத காலங்களிலும் என்னால் முடியுமான உதவிகளை செய்து கொண்டுதான் இருக்கின்றேன்.


இந்தச் சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இந்த ஊரில் இருந்துகொண்டு அவதானிக்கின்றேன். மக்களினுடைய பிரச்சினைகளை அரசியல்வாதிகளிடமும் அதிகாரிகளிடமும் தனியார் நிறுவனங்களிடமும் கொண்டு சென்று பணி செய்யும் வல்லமையை இறைவன் தந்துள்ளான். மக்களுக்கான எனது பணியினை தொடர்ந்தும் முன்னெடுப்பேன்.–என்றார்.

# அல்வாயின் அகல்விளக்கு கலாமணி! வடமராட்சியில் முகிழ்ந்த பெருவிருட்சம்!!

■ ஐங்கரன் விக்கினேஸ்வரா

வடமராட்சியில் கடந்த 1987 ‘ஒப்பரேஷன் லிபரேஷன்’ போது நடந்தேறிய கொடுமைகளின் கோரங்களையும் சிதைவுகளையும் முதலாவதாக ஆண்டு நினைவு கூர்வாகக் கொண்டு வெளியாகும் “கல்லறை மேலான காற்று” கவிதைத் தொகுதிக்கு முன்னுரை ஒன்று அவசியம்தானா என்பது இன்னமும் வினாவாகவே என்னிடம் உள்ளது என்ற ஆசான் கலாமணியின் வார்த்தைகள் இன்னமும் என் மன நினைவுகளில் பதிந்துள்ளன.

இப்படித் தான் எங்கள் இலக்கிய நட்பு முகிழ்ந்தது. காற்றுக் கூட அனலாக வீசிக்கொண்டிருந்த 1988 போர்க் காலகட்டம். அவ்வேளையிலும் விடியலை நோக்கிய எழுச்சியில் சண்டமாருதமாய் எழுந்து நின்ற இளங் கவிஞர்களின் படைப்பே “கல்லறை மேலான காற்று” எனும் கவிதை தொகுப்பாகும்.




வடமராட்சி ஒப்பரேஷன் லிபரேஷன் கொடூர நினைவுகளின் அழியாத, அனல் வீசும் கவிதை தொகுப்பை ஈரோசின் மாணவர் இளைஞர் பொது மன்றத்தால் (GUYS) 1988 இல் வெளியிடப்பட்டது.

இந்த நூலின் முன்னுரையில் ‘விமர்சனமாக அமையக் கூடாதென்பதால் கவிதைகள் பற்றித் தனித்தனியாகவே கருத்துக்கூறுதல் பொருத்தமன்று. எனினும் இந்தக் கவிதைகள் யாவுமே, இராணுவக் கொடுமைகள் எம்மிடம் எவ்வளவு ஆழமாகப் பதிந்துள்ளன என்பதை வெளிக் காட்டும் பொதுப் பண்பைத் தம்மகத்தே எனக்கூறுதல் சாலப் பொருந்தும். ‘வடமராட்சியில் நிகழ்ந்த கொடுமைகளைக் கூறும் வகையிலும் இதற்கு ஓர் இடமுண்டு’ என எழுதியுள்ளார் ஆசான் கலாமணி.

வடமராட்சி “ஒப்பரேஷன் லிபரேஷன்” ஓராண்டு நினைவுக் கவிதைகளை படைத்த இளங் கவிஞர்களின் படைப்பான “கல்லறை மேலான காற்று” எனும் கவிதை தொகுப்பாக்கு ‘அல்வைக் கலா’ எனும் எங்கள் பேராசான் கலாநிதி த. கலாமணி 31-05-1988 இல் எழுதிய முன்னுரையாகும்.

அண்மையில் கலாமணியின் மைந்தன் பரணீதரனுடன் ஆசானின் முன்னுரைகளை தொகுத்து நூலாக்க வேண்டும் என கலந்துரையாடினோம். அவர் வாழும் போதே நூலாக்க வேண்டும் என்று முயன்றோம். எனினும் அவருக்கு சமர்ப்பணமாக அந்த நூல் விரைவில் வெளிவரும்.

### கல்வியியல் துறை ஆசான்

யாழ். பல்கலைக்கழகக் கல்வியியல் துறை ஆசானாகிய கலாநிதி தம்பிஐயா கலாமணி (1952.02.04) யாழ்ப்பாணம், பருத்தித்துறை அல்வாயைச் சேர்ந்த பிரபல்யமான நாடகக் கலைஞரும் ஆவார். பேராதனைப் பல்கலைக்கழக பௌதீகவியல் பட்டதாரியன இவர், இயல், இசை, நாடகம் ஆகிய துறைகளில் ஈடுபாடு கொண்டவர். தனது தந்தையிடம் நாடகம், கவிதை, சிறுகதை, நாவல், விமர்சனம் போன்ற பல துறைகளையும் கற்றுக் கலைப்பணி ஆற்றி வந்துள்ளார்.




இவரது முதலாவது சிறுகதைத் தொகுப்பு ‘நாள்கள் , கணங்கள் நமது வாழ்க்கை’ என்பதாகும். இவர் ‘ஒப்பிலாமணியே’ என்ற குறும்படத்திலும் நடித்துள்ளார். 1974 முதல் சிறுகதை எழுத ஆரம்பித்து 35 ஆண்டுகளில் 30 இற்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார். இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வியற் துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணியாற்றியுள்ளார்.

வடமராட்சியின் மூத்த விருட்சமாக என்றும் விளங்கும் கலாமணி ஆசான் படைத்த படைப்புக்கள் பல. அவற்றுள் அம்மாவின் உலகம், இலக்கியமும் உளவியலும், இளையோர் இசை நாடகம், ஏனிந்தத் தேவாசுர யுத்தம், காலநதியின் கற்குழிவு, ஜீவநதி நேர்காணல்கள் ஆகிய நூல்கள் குறிப்பிடத்தக்கவை.

அல்வாய் மண்ணின் அகல்விளக்காக ஒளி வீசிய ஆசான் கலாமணியின், திரு ஊஞ்சல்– கொற்றாவத்தை சிறப்பாவளை அவதாரக் கண்ணன் ஸ்ரீ ரமணன் திருவுடையாள்– பிரதேசமலர் 2011, நதியில் விளையாடி, நாள்கள் கணங்கள் நமது வாழ்க்கைகள், பாட்டுத் திறத்தாலே, புதிய கண்ணோட்டங்களும் புதிய அர்த்தங்களும், பௌதிக விஞ்ஞானக் கலைச்சொற்கள், மாற்றம் காணும் கல்வி உலகுடன் இணைதல், வடமராட்சி வலயக் கல்விச் சமூகம் முன்னெடுக்கும் ஆசிரியர் மகாநாடு 2016 ஆகியன இவரது மண் வாசம் வீசும் நூல்களாகும்.

### அல்வாயின் அகல்விளக்கு

மனோகரா நாடக சபாவின் இயக்குனரான இவர், வாலிவதை, சத்தியவான் சாவித்திரி, பவளக்கொடி, ஸ்ரீ வள்ளி, கோவலன் கண்ணகி, பூதத்தம்பி, பாஞ்சாலி சபதம் நாடகங்களில் நடித்துள்ளார்.

இவரது எனது நாள்களின் கணங்கள் நமது வாழ்க்கைகள் சிறுகதை நூலுக்கு, வடக்கு – கிழக்கு மாகாணக் கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சால் சிறந்த நூலுக்கான விருது 2000 ஆம் ஆண்டு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மண்வாசனை வீசும் எழுத்தை தன் உயிராக நேசித்த அல்வாயின் அகல்விளக்கு கலாமணி விண்ணேவிய தகவல் மனதை நெருடியது.

வடமராட்சியில் முகிழ்ந்த பெருவிருட்சமான கலாமணி ஆசான் என்றும் புதிய தலைமுறைகளுக்கான வழி காட்டியாய் இருப்பார்.



# போதைவஸ்துப் பாவனையை ஒழிக்க அமைக்கப்பட்டுவரும் இரகசியக் குழு!

(எம்.ஏ.ஏ.அக்தார்)

சமூகத்தில் குணப்படுத்த முடியாத ஒரு நோயாக புரையோடிப்போயுள்ள போதைவஸ்து பாவனையை முற்றாக ஒழிக்கும் நோக்கில் சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்தால் அதிரடி இரகசியக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இது வெற்றியளித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாய்ந்தமருது பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.எல்.சம்சுதீன் தலைமையில் கல்முனை பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியின் வழிகாட்டலில் சாய்ந்தமருது அல் ஜலால் வித்தியாலய வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்ற இடம்பெற்ற சந்திப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்த நிகழ்வில் பொலிஸ் அதிகாரிகள், பாடசாலை ஆசிரியர்கள், சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.

சமூகத்தில் இருக்கும் பாடசாலை சூழல் சார்ந்த சமூகத்தின் மீது அக்கறை கொண்ட கல்விசார் உத்தியோஸ்தர்கள், வர்த்தகர்கள், வாகன ஓட்டுனர்கள், அயல் வீட்டார், நலன் விரும்பிகள் மற்றும் சமூகத்தின் மீது அக்கறை கொண்டோருக்கு இடையிலான போதை பொருளை இல்லாதொழிப்பதற்கான பல தீர்மானங்கள் இதன்போது நிறைவேற்றப்பட்டன.

# தம்பலகாமத்தில் நடமாடும் சேவை

(ஹஸ்பர்)

பிறப்பு, இறப்பு மற்றும் திருமணப் பதிவுகள் தொடர்பான நடமாடும் சேவை தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நடமாடும் சேவையானது தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் இடம் பெற்றது.

இதில் பிறப்பு, இறப்பு, திருமண பதிவுச் சான்றிதழ்கள் இல்லாதவர்களுக்காக சான்றிதழ்களை பெற்றுக் கொடுத்தல் மற்றும் தேசிய அடையாள அட்டை சிக்கல்களை தீர்த்தல், காணிப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைப் பெறல் என பல சேவைகள் இடம்பெற்றன. பொது மக்கள் இதன் போது பயனடைந்தனர்.

இதில் மாகாண காணி ஆணையாளர் தசநாயக்க, உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.







# உத்தராகண்ட் கலவரம்: உயிரிழப்பு அதிகரிப்பு

உத்தராகண்ட் மாநிலம் ஹல்துவானியில் ஆக்கிரமித்து கட்டப்பட்ட மதரஸா, மசூதி இடிக்கப்பட்டதால் ஏற்பட்ட கலவரத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 5 ஆக அதிகரித்துள்ளது. சுமார் 300 பேர் காயமடைந்துள்ளனர்.

உத்தராகண்ட் மாநிலம் ஹல்துவானியில் ஆக்கிரமித்து கட்டப்பட்ட கட்டிடங்கள் உயர் நீதிமன்ற உத்தரவின்படி இடிக்கப்பட்டு வருகின்றன. பொலிஸ் பாதுகாப்புடன் 20 நாள்களாக இப்பணி நடைபெறுகிறது. இந்த நிலையில் முஸ்லிம்கள் அதிகம் வாழும் வன்புல்புரா பகுதியில் அதிகாரிகள் நேற்று முன்தினம் ஆக்கிரமிப்புகளை அகற்ற வந்தனர்.

இங்கு மல்லீக் தோட்டம் எனும் பகுதியில் அரசுக்கு சொந்தமான நசூல் நிலத்தில் கட்டப்பட்டிருந்த மதரஸா, மசூதியை மாலை 5 மணிக்கு அதிகாரிகள் இடிக்கத் தொடங்கினர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து அதிகாரிகள் மீது அப்பகுதியினர் கல்வீசி தாக்குதல் நடத்தினர்.

வீடுகளின் மேலிருந்து போத்தல்கள், கற்களை வீசி தாக்குதல் நடத்தினர். இதில் நூற்றுக்கும் மேற்பட்ட நகராட்சி பணியாளர்களும் பொலிஸாரும் காயம் அடைந்தனர். வன்முறை கும்பல்கள் வாகனங்களுக்கு தீ வைத்தன. இந்த கலவரத்தில் பொலிஸார் மற்றும் வன்முறையாளர்கள் இடையே துப்பாக்கிச் சூடும் நடைபெற்றது. பின்னர் ஹல்துவானி முழுவதிலும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

நேற்று காலை வரை தொடர்ந்த கலவரம் நண்பகலில் கட்டுக்குள் வந்தது. இக்கலவரத்தில் தந்தை, மகன் உள்ளிட்ட 5 பேர் உயிரிழந்தனர். பொலிஸார் உட்பட சுமார் 300 பேர் படுகாயமடைந்தனர். கலவரம் பரவாமல் தடுக்க இணைய சேவை முடக்கப்பட்டது. கலவரக்காரர்களை கண்டதும் சுட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

# மயிலாப்பூரில் பா.ஜ.க. அலுவலகத்துக்கு சீல்



சென்னை மயிலாப்பூரில் பா.ஜ.க. அலுவலகத்தை இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகள் பூட்டி சீல் வைத்துள்ளனர்.

மக்களவை தேர்தலையொட்டி பா.ஜ.க. தென் சென்னை மாவட்டம் சார்பில் நேற்று முன்தினம் மயிலாப்பூர் சட்டப்பேரவை தொகுதியின் மக்களவை தேர்தல் அலுவலகம் திறக்கப்பட்டது.

மயிலாப்பூர் ஆர்.கே.மடம் சாலையில் கபாலீஸ்வரர் கோயிலுக்கு சொந்தமான இடத்தில் இந்த தேர்தல் அலுவலகம் திறக்கப்பட்டது.

இந்த நிலையில் வணிக ரீதியாக பயன்பாட்டுக்கு என்று கோயில் இடத்தை வாங்கி அதில் அரசியல் கட்சி அலுவலகம் திறந்ததால் அதனை இந்து சமய அறநிலைத்துறை அதி காரிகள் பூட்டி சீல் வைத்தனர்.

# தமிழக ஆளுநரின் வருகைக்கு எதிர்ப்பு: திருச்சியில் கொம்யூனிஸ்ட் கட்சியினர் கைது

தமிழக ஆளுநரின் திருச்சி வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து கறுப்புக் கொடி காட்டும் போராட்டத்தில் ஈடுபட்ட 50 இற்கும் மேற்பட்ட கொம்யூனிஸ்ட் கட்சியினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி திருச்சி ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் கல்லூரி மற்றும் கருமண்டபம் தேசிய கல்லூரியில் நடைபெறும் நிகழ்வுகளில் பங்கேற்பதற்காக இன்று திருச்சிக்கு செல்லவுள்ளார்.

இந்த நிலையில் ஆளுநர் தமிழக நலனுக்கு எதிராக இருக்கிறார் எனவும் தெய்வப் புலவர் திருவள்ளுவரை கொச்சைப்படுத்தினார் என்றும் குற்றம் சாட்டி, ஆளுநர் செல்லும் திருவானைக்



காவல் ட்ராங்க் ரோடு பகுதியில் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த 50 இற்கும் மேற்பட்டோர் கறுப்புக்கொடி ஏந்தி திடீர் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

இதனைத் தொடர்ந்து பொலிஸ் துணை ஆணையர் அன்பு தலைமையிலான பொலிஸார் போராட்டத்தில் ஈடுபட்ட அனைவரையும் கைது செய்தனர்.

இந்தப் போராட்டத்தால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு நிலவியதுடன், போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது.

# இலங்கையில் இருந்து மீனவர்களை மீட்பதற்கு நடவடிக்கை வேண்டும்

## பிரதமர் மோடிக்கு முதல்வர்ஸ்டாலின் கடிதம்

இலங்கை வசம் உள்ள 77 தமிழக மீனவர்கள் மற்றும் அவர்களது 151 படகுகளை உடனடியாக விடுவிக்க தூதரக முயற்சிகளை மேற்கொள்ளுமாறு பிரதமர் நரேந்திர மோடிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இதுகுறித்து பிரதமர் மோடிக்கு முதல்வர் நேற்று எழுதிய கடிதத்தில் மேலும் குறிப்பிடுகையில்,

"இலங்கை கடற்படையினர் கடந்த 2023 இல் 243 தமிழக மீனவர்களை கைது செய்து, 37 படகுகளை பறிமுதல் செய்துள்ளனர். கடந்த 28 நாள்களில் மட்டும் 88 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களின் 12 மீன்பிடி படகுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இப்படிப்பட்ட பதற்றமான சூழ்நிலையில், மீன்பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்கள் மீது அடையாளம் தெரியாத நபர்களால் நடத்தப்படும் தாக்குதல்கள், மீனவர்களின் படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களுக்கு ஏற்படுத்தும் சேதங்கள் கவலையை மேலும் அதிகரித்துள்ளது. இதுபோன்ற செயல்கள் மீனவர்களின் உயிருக்கு ஆபத்தை விளைவிப்பதுடன், மீனவர்களுக்கு பொருளாதார பாதிப்புகளை மேலும் அதிகரித்துள்ளது.

வெளிநாட்டு மீன்பிடி படகுகளை நாட்டுடமையாக்க இலங்கை அரசுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில், 2018 இல் இலங்கை அரசால் கடல்சார் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தம் தொடர்பாக, முன்பே நான் எழுதிய கடிதத்தில் சுட்டிக்காட்டி இருந்தேன்.

பல மீனவர்கள் தங்கள் வாழ்நாள் சேமிப்பைக் கொண்டு, தங்களது வர்த்தகத்துக்கு இன்றியமையாத படகுகளை வாங்குவதற்கும், அவற்றைப் பராமரிப்பதற்கும் முதலீடு செய்துள்ளனர். முறையான இழப்பீடு அல்லது மாற்று ஏற்பாடுகள் ஏதுமில்லாமல், படகுகள் இதுபோன்று நாட்டுடையாக்கப்படுவது, மீனவர்களையும், அவர்களது குடும்பங்களையும் நிதி நெருக்கடியில் தள்ளியுள்ளது.

எனவே, பறிமுதல்செய்யப்பட்டுநாட்டுடமையாக்கப்பட்டுள்ள இந்திய மீன்பிடி படகுகளை திரும்ப பெறவும், படகுகளை உடனடியாக விடுவிக்கவும் ஏதுவாக, சட்டத்தில் உரிய



திருத்தங்களை மேற்கொள்ள இலங்கை அரசை வலியுறுத்த வேண்டும்.

இலங்கை வசம் உள்ள 77 மீனவர்கள் மற்றும் அவர்களது 151 படகுகளை உடனடியாக விடுவிக்க தேவையான அனைத்து தூதரக முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

கடந்த ஜனவரி 3 ஆம் திகதி பாகிஸ்தான் அதிகாரிகளால் சிறை பிடிக்கப்பட்ட தமிழக மீனவர்களையும், 2023 டிசெம்பர் 5 ஆம் திகதி குவைத் கடலோர காவல் படையினரால் கைது செய்யப்பட்ட 4 தமிழக மீனவர்களையும் விடுவிக்க, உரிய தூதரக வழிமுறைகளை பின்பற்றி நடவடிக்கை எடுக்க வேண்டும்." - என்று குறிப்பிட்டுள்ளார்.

# இரசாயனம் கலப்பது உறுதி செய்யப்பட்டதால் புதுச்சேரியில் பஞ்சு மிட்டாய் விற்பதற்கு தடை

புதுச்சேரியில் பஞ்சு மிட்டாய் விற்பனைக்கு தடை விதிக்கப்பட் டுள்ளதாக ஆளுநர் தமிழிசை சவுந்த ரராஜன் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் உணவுப் பாதுகாப்புத் துறை அதிகாரி ரவிச்சந்திரன் தலைமையில் கடந்த 7 ஆம் திகதி நடத்தப்பட்ட சோதனையில் 'பிங்க்' நிறத்தில் விற்பனை செய்யப்படும் பஞ்சு மிட்டாயில் 'ரோடமின்-பி' என்ற இரசாயனம் கலப்பது உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து, விற்பனையில் ஈடுபட்ட வடஇந்தியர்கள் குறித்த தகவல்கள் திரட்டப்பட்டன.

புதுச்சேரிக்கு அதிகமானோர் சுற்றுலா செல்கின்றனர். அவர்களின் குழந்தைகளைக் குறிவைத்து பஞ்சு



மிட்டாய் விற்கப்படுகிறது. குறிப்பாக, கடற்கரைப் பகுதிகளில் பஞ்சு மிட்டாய் அதிக அளவில் விற்கப்பட்ட சூழலில், மக்களிடையே இந்த தகவல் அதிர்ச்சியையும், அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

# ஹவுதி கிளர்ச்சிப் படையினரைக் குறிவைத்து அமெரிக்கா மூன்றாவது முறையாக தாக்குதல்

ஹவுதி கிளர்ச்சிப் படையினரைக் குறிவைத்து அமெரிக்கா மூன்றாவது முறையாகவும் தாக்குதல் நடத்தியுள்ளது.

தாக்குதல் தொடர்பில் அமெரிக்க இராணுவம் நேற்று அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில், செங்கடலில் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்திவரும் ஹவுதி கிளர்ச்சியாளர்களின் 4 ஆளில்லா படகுகள், கப்பல் அழிப்பு ஏவுகணைகளைத் தாங்கிய 7வாகனங்களை தங்களது படையினர் தாக்கி அழித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காசா போரில் ஹமாஸுக்கு ஆதரவளிக்கும் வகையில் செங்கடல் வழியாகச் செல்லும் இஸ்ரேல் தொடர்புடைய கப்பல்கள் மீது ஹவுதிகள் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், அவர்கள் மீது அமெரிக்காவும், பிரிட்டனும் இணைந்து தாக்குதல் நடத்தி வருகின்றன.



காசாவுக்கு ஆதரவாக செங்கடலில் தொடர் தாக்குதல்கள் நடத்தப்படும் என்று யேமனின் ஹவுதி கிளர்ச்சிக் குழு தெரிவித்திருந்த நிலையில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தானில் கூட்டணி ஆட்சி: முன்னணி கட்சிகள் உடன்பாடு

பாகிஸ்தானில் கூட்டணி ஆட்சி அமைக்க நவாஸ் ஷெரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சியும், பாகிஸ்தான் மக்கள் கட்சியும் ஒப்புக் கொண்டுள்ளன.

பாகிஸ்தானில் கடந்த 8 ஆம் திகதி அந்த நாட்டின் தேசிய அவைக்கும் (நாடாளுமன்றம்), மகாண அவைகளுக்கும் (சட்டப்பேரவை) தேர்தல் நடைபெற்றது. அன்றைய தினம் காலை 8 மணிக்குத் தொடங்கிய வாக்குப்பதிவு மாலை 5 மணிக்கு நிறைவடைந்தது.

இதையடுத்து, உடனடியாக வாக்கு எண்ணிக்கை தொடங்கியது. வாக்குச் சீட்டு மூலம் தேர்தல் நடைபெற்றதால் வாக்கு எண்ணும் பணி இன்னும் முடிவுக்கு வரவில்லை.

இன்று நண்பகல் 12 மணி நிலவரப்படி தேசிய அவையின் மொத்தமுள்ள 266 இடங்களில், இம்ரான் கானின் ஆதரவு வேட்பாளர்கள் 91



இடங்களில் வெற்றி பெற்றுள்ளனர்.

நவாஸ் ஷெரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம லீக் கட்சி 71 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. முன்னாள் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரியின் பாகிஸ்தான் மக்கள் கட்சி 53 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. யாருக்கும் பெரும்பான்மை கிடைக்காத நிலையில், பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சியும், பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சியும் கூட்டணி ஆட்சி அமைக்க ஒப்புக்கொண்டுள்ளன.

நவாஸ் ஷெரீப்பின் அறிவுறுத்தலின் பேரில் முன்னாள் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைவர்கள் ஆசிப் அலி சர்தாரி, பிலாவல் பூட்டோ ஆகியோரைச் சந்தித்துப் பேசினார்.

பஞ்சாப் மாகாண தற்காலிக முதல்வர் முஷின் நக்வியின் இல்லத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இந்த சந்திப்பின்போது, கூட்டணி ஆட்சி அமைப்பதற்கான நவாஸ் ஷெரீப்பின் செய்தியை ஷெபாஸ் ஷெரீப் பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவர்களிடம் தெரிவித்தார் எனவும் அதனை அவர்கள் ஏற்றுக்கொண்டனர் என்றும் செய்தி வெளியாகி உள்ளது. மத்தியிலும், பஞ்சாபிலும் கூட்டணி ஆட்சி அமைப்பது என்றும், எந்தெந்த பதிவிகள் யார் யாருக்கு என்பது தொடர்பாக இரு கட்சிகளின் தலைவர்களும் அமர்ந்து பேசி முடிவெடுக்கலாம் என்றும் முடிவாகி இருப்பதாகக் கூறப்படுகிறது.

# அமெரிக்க ஜெட் விமானம் விபத்து: இரண்டு பயணிகள் உயிரிழந்தனர்

அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் தனியார் ஜெட் விமானம் விபத்துக்குள்ளானதில் இரண்டு பயணிகள் உயிரிழந்துள்ளனர்.

விமானம் விபத்துக்குள்ளான போது அதில் ஐந்து பேர் பயணித்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

நேபிள்ஸ் விமான நிலையத்தில் தரையிறங்கவிருந்த விமானம் இயந்திரக் கோளாறு காரணமாக இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

